(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 336.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 சனவரி 23, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2704/ '12

1.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாடு பூராவும் உள்ள பிரிவேனாக்களின் அலுவல்களை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பிரிவேனா பரிசோதகர்களான தேரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பரிசோதகர்களான தேரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் கல்வித் தகைமைகள் தனித் தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவி வகிக்கின்ற தேரர்களின் வினைத்திறனின்மை மற்றும் குறைந்த கல்வித் தகைமைகள் காரணமாக பிரிவேனாக் கல்வி வினைத்திறனற்றதாக மாறியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி நிலைமையை தவிர்ப்பதற்காக தகைமைகளுள்ள உத்தியோகத்தர்களை மேற்படி பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

2823/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றுள்ளவாராக தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களை அறிந்து கொள்வது இலங்கையில் சட்டபூர்வமானதா என்பதையும்;

(ii) இவ்வாறு தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களைப் பெறுவது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினையும்;

(iv) கடப்பாடுகள் தீவிர நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தொலைத் தொடர்பு நிறுவனங்களின் பெயர்களையும்;

(v) நபரொருவரின் அடிப்படை உரிமையில் தலையிடுகின்றதான தொலைபேசி உரையாடலை இடைமறித்துத் தகவல்களைப் பெறுகின்றமைக்கு அதிகாரமளிக்கக் கூடிய ஆளையும்;

(vi) தொலைபேசி உரையாடல் இடைமறிக்கப்பட்டு தகவல்கள் அறிந்து கொள்ளப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3376/ '12

3.

கௌரவ பி. ஹரிசன்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தில் நெற்பயிர்ச்செய்கை தவிர ஏனைய பயிர்செய்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகள் உரமானியத்தின் கீழ் உள்ளடக்கப்படுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் இயற்கை அனர்த்தம் காரணமாக சேதமேற்படும் மரக்கறி, பழவகைகள் மற்றும் ஏனைய களப் பயிர்ச்செய்கைகளுக்கு ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் காப்புறுதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைகளுக்கு உர மானியம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றுக்கு வழங்கப்படும் 50 கிலோகிராம் கொண்ட மானிய உரம் உறையொன்றின் விலை எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த மூன்று வருடங்களில் குறிப்பிட்ட பயிர்களுக்காக வழங்கப்பட்டுள்ள உர மானியத்தின் அளவு மற்றும் அதன் பெறுமதி யாது என்பதையும்;

(iv) உர மானியம் பெறும் தேயிலை, இறப்பர், மற்றும் தெங்கு உற்பத்தியாளர்கள் மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட கமத்தொழில் காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்கப்படுவார்களாயின் இவர்களுக்கு காப்புறுதி இழப்பீடு கிடைக்கும் அனர்த்த நிலைமைகள் யாவை என்பதையும்;

(v) இயற்கை அனர்த்தத்தினால் சேதமுறும் மேற்படி பயிர்ச்செய்கை ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் காப்புறுதி இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3941/ '13

4.

கௌரவ அநுர திசாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி சட்டத்திற்கு அமைய அமைச்சரினால் ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(iv) மேற்படி ஒழுங்குவிதிகள் தொடர்பாக வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இன்றேல், மேற்படி ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு, உரிய வர்த்தமானப் பத்திரிகைகளை வெளியிடுவதற்கு இவ்வளவு காலம் எடுத்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2706/ '12

5.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை பம்புரண சாரிபுத்ர மகா வித்தியாலயத்தில் மேலதிக ஆசிரியர்களைப் பற்றி மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் உத்தியோகத்தர்களால் 2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கணக்காய்வின் போது நீண்ட சேவைகாலமுடைய மேலதிக ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி பெயர் பட்டியல் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் வித்தியாலயத்தின் லொக் புத்தகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இவ்வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருக்கு நெருக்கமான மேற்படி பெயர்ப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களை அங்கேயே வைத்துக்கொண்டு கற்பித்தல் நேரசூசியுடைய குறைந்த சேவைக்காலத்தை கொண்ட வேறு ஆசிரியர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அதிபரின் தான்தோன்றித்தனமான செயற்பாடு காரணமாக இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பெரும் அநீதி நிகழ்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் மேலதிக ஆசிரியர்களைப் பற்றி வலயக் கல்விக் காரியாலயத்தினால் நடாத்தப்பட்ட கணக்காய்வின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2827/ '12

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 முதல் 2011 வரை இலங்கையில் தொழில்புரிவதற்கு அனுமதியளிக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) இந்திய நாட்டவர்களுக்கான வீசா தேவைப்பாடுகளில் மிகுந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும்;

(iii) வருகைதந்துள்ள இந்தியர்களுக்கான வீசாவுக்கு ஏன் கட்டணம் அறவிடப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வேறு ஏதாவது நாட்டின் 500 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) வெளிநாட்டவர்களை தொழில்புரிவதற்கு இங்கு அனுமதிப்பதால் இலங்கை பெற்றுக்கொள்ளும் நன்மைகள் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் இன்று வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்டு யானைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான மின்சார வேலிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி மின்சார வேலிகளின் மொத்த நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வேலிகளின் பராமரிப்புக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) ஒரு கிலோ மீட்டர் மின்சார வேலியின் நிர்மாணிப்புக்கும் பராமரிப்புக்குமாக ஏற்படுகின்ற மொத்த செலவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த 05 வருடத்தினுள்,

(i) நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்டு யானைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான மின்சார வேலிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின்சார வேலியின் நீளம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) யானை- மனித மோதலின் காரணமாக இழக்கப்பட்டுள்ள மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் காட்டு யானைகளின் எண்ணிக்கை வருட ரீதியில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி சேதங்களுக்காக அரசாங்கம் செலுத்தியுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்டவாறு பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளபோதிலும், காட்டு யானைகளின் உயிர்கள், மனித உயிர்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றுக்கு சேதம் ஏற்படுதல் அதிகரித்துள்ளதென்பதையும்;

(ii) எனவே, மேற்படி முறைகளைவிட மாற்று முறைகளைக் கடைப்பிடித்தல் பொருத்தமாகுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி இ(ii ) க்கு ஏற்புடையதான மாற்று முறையை அவர் இச்சபைக்கு வெளிப்படுத்துவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3942/ '13

8.

கௌரவ அநுர திசாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் 2012 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்குள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றுள்ள கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடன் பெற்றுள்ள நிறுவனங்கள் வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கடனைச் செலுத்த வேண்டியுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள்,

(i) கடனுக்காக செலுத்தப்பட்டுள்ள வட்டித் தொகை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) கடனுக்காக செலுத்தப்பட்டுள்ள மொத்த வட்டித் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3225/ '12

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்குப் புறம்பாக இலங்கையில் இயங்கும் விமானச் சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) விமானப் பயணங்களின் வகைப்படுத்தல்களையும் வாரமொன்றில் பிரயாணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஸ்ரீ லங்கன் எயர் லைன்ஸ் விமானங்கள் கொழும்பிலிருந்து பல்வேறு இடங்களுக்கு வாரமொன்றில் மேற்கொள்ளும் பிரயாணங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ ரொசான் ரணசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

9.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

10.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

12.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

13.

மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

14.

ஹேண்ட்ஸ் பொ எடியுகேஷன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

15.

சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

16.

பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.